මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01, இலங்கை.
The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: BD/CBP/01/01/05-2022
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2022.12.27

**வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருப இல. 09/2022**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் / மாவட்டச் செயலாளர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள், கம்பனிகள், நியதிச் சட்டச் சபைகளின் தலைவர்கள்
அனைவருக்கும்

**<u>2023 வருடத்தில் பொதுச் செலவினங்களை மேற்கொள்ளல் மற்றும் முகாமைசெய்தற்கான அங்கீகாரம் வழங்கல்</u>**

**01. செலவினத்தினை மேற்கொள்வதற்கான அங்கீகாரம்**

2022 இன் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் 2022.12.08 அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதுடன், அச்சட்டத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட வரையறைகளுக்கு உட்பட்டு 2023 ஆம் வருடத்திற்கான செலவினங்களை மேற்கொள்வதற்கு முடியுமான வகையில் திரட்டு நிதியத்திலிருந்து மீளப் பெறுவதற்கு அதிகாரமளிக்கும் வகையில் நிதி அமைச்சர் அரசியலமைப்பின் 150(1) பிரிவின் நியதிகளின்படி ஆணைப்பத்திரங்களில் கையெழுத்திட்டுள்ளார்.

அதன்படி, 2023 வருடத்தில் பணம் செலுத்தும் வவுச்சர்கள் மற்றும் பிற ஆவணங்களில் தொடர்புடைய அதிகாரம் பின்வருமாறு குறிப்பிடப்படல் வேண்டும்;

| | | | |
|---|---|---|---|
| அ). | பொது அரச சேவைகள் தொடர்பில் | - | 2023 இன் 1 ஆம் இலக்க பொது ஆணைப்பத்திரம் |
| ஆ). | விஷேட சட்டச் சேவைகள் தொடர்பில் | - | 2023 இன் 1 ஆம் இலக்க விஷேட சட்ட ஆணைப்பத்திரம் |
| இ). | முற்பணக் கணக்கு செயற்பாடுகள் தொடர்பில் | - | 2023 இன் 1 ஆம் இலக்க முற்பண ஆணைப்பத்திரம் |

**02. பொதுச் செலவினங்களுக்கான முகாமைத்துவப் பொறுப்பு**

நிதிப் பிரமானம் 127 இன் அடிப்படையில், அனைத்து பிரதான கணக்கீட்டு அலுவலர்களும் அவர்களுக்குக் கீழ்வரும் நிறுவனங்களின் நிதி நிர்வாகம் போதியளவானது என்பதனை உறுதி செய்யும் வகையில் நிதி அமைச்சருக்கு பொறுப்புக்கூற வேண்டும். அதேபோன்று, 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 05 இன் உப பிரிவு 05.1 மற்றும் 2023 ஆண்டுக்கான விரிவான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளின் முன்னுரையில் குறிப்பிடப் பட்டவாறான வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளின் வரையறைகளை மீறாத வகையில்,

செலவினத்தினை முகாமைசெய்வது பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்கள் அதேபோன்று அத்துறைக்குப் பொறுப்பான அலுவலர்களின் பொறுப்பாகும் என்ற விடயத்துக்கு வலுவான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

**03. 2023 ஆம் ஆண்டில் பொதுச் செலவின முகாமைத்துவம்**

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக, 2023 ஆம் ஆண்டில் பொதுச் செலவுகள் முன்னெப்போதையும் விட மிகவும் கவனமாகச் செய்ய வேண்டும். அந்த வகையில், பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஏற்கனவே வெளியிடப்பட்ட 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை மற்றும் அரச நிறுவனங்களால் பல்வேறு நிகழ்வுகளுக்காக மேற்கொள்ளப்படும் செலவினங்களை இடைநிறுத்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட 08/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களும் வலியுறுத்தப்படும் அதே போன்று சனாதிபதியின் செயலாளரால் வெளியிடப்பட்ட 2022.08.15 ஆந் திகதிய PS/SB/Circular/10/2022 ஆம் இலக்க **சுற்றறிக்கையின் விதிகள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுதல் வேண்டும்.**

குறித்த வருடத்தின்போது செலவினங்களை மேற்கொள்ளும் போது கீழே குறிப்பிடப்பட்ட முன்னுரிமைகளின் ஒழுங்கு பின்பற்றப்படுதல் வேண்டும்.

(அ) கையிலுள்ள விலைப்பட்டியல்கள் / பொறுப்புக்களைத் தீர்த்தல்
(ஆ) அத்தியவசிய செயற்பாடுகளை முன்னெடுத்தல்
(இ) அன்மையில் நிறைவுசெய்யப்படவுள்ள பணிகளைப் பூரணப்படுத்தல்
(ஈ) பகுதியளவு நிறைவு செய்யப்பட்ட பணிகளின் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமத்தைத் தவிர்க்க தற்காலிக ஏற்பாடுகளைச் செய்தல்.
(உ) புதிய அர்ப்பணிப்புகள் தொடர்பான செலவினம்.

**04. அர்ப்பணிப்புகளை முகாமைசெய்தல்**

2022 வருடத்திற்கான நிலுவையிலுள்ள விலைப் பட்டியல்கள் ஏதேனுமிருப்பின், 2023 வருடத்திற்கான புதிய அர்ப்பணிப்புகளில் ஈடுபடுவதற்கு முன்பு அவை தீர்க்கப்படுதல் வேண்டும். எந்தவொரு அர்ப்பணிப்புக்கும் முன், ஒவ்வொரு செலவினங்களுடனும் போதுமான வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகள் உள்ளனவா என்பதை உறுதிசெய்தல் வேண்டும். தீர்க்கப்படாத பொறுப்புகள் திரள்வதால் அரசாங்கம் மற்றும் ஒப்பந்ததாரர்கள் / சேவை வழங்குநர்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தடுப்பதற்காக, நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருப்பினும், எந்தவொரு அர்ப்பணிப்பிலும் ஈடுபடுவதற்கு முன்னர், கட்டுநிதியின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தல் முக்கியமானதாகும்.

இதன்படி, 2023 வருடத்திற்காக ரூபா 500 மில்லியனுக்கு அதிகமான அல்லது பல வருடங்களாக கொடுப்பனவை செலுத்தும் வகையில் மொத்த செலவினம் ரூபா 1,000 மில்லியனுக்கு அதிகமான மூலதன செலவின விடயம் தொடர்பில் பொறுப்புகளுக்குச் சொல்வதற்கு முன்னர் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் இணக்கம் பெறப்படிதல் வேண்டும். இது சம்பந்தமாக, திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் காத்திருப்புப் பட்டியலைப் பேணுவதுடன், அதன் நிதி நிலைமை மற்றும் முன்னுரிமைகளுக்கு ஏற்ப இணக்கப்பாட்டினை வழங்கும்.

வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளின்றி செய்யப்படும் அர்ப்பணிப்புகளுக்கு திறைசேரி பொறுப்பேற்காது என்பதால், அத்தகைய செலவினங்களுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்பாவார்கள்.

**05. மாவட்டச் செயலகங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்குதல் (நி.பி. 208)**

நிரல் அமைச்சுக்கள் தமது செயற்பாடுகளை மாவட்டச் செயலகங்களினூடாக செயற்படுத்துகின்ற போது, குறித்த பணிகளை நிறைவு செய்வதற்குப் போதுமான கால அவகாசம் வழங்கும் வகையில் உரிய வருடத்தின் இறுதிக் காலாண்டிற்கு முன்னர் ஒதுக்கீடுகள் மாற்றப்படுதல் வேண்டும்.

**06. மேலதிக ஒதுக்கீடுகளுக்கான கோரிக்கைகள்**

தற்போது காணப்படும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட பொது நிதி ஏற்பாடு காரணமாக செலவின அலகுகளுக்கு ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளை விஞ்சுவதன் மூலம் மேலதிக ஒதுக்கீடுகளை வழங்குவது மிகவும் கடினம் என்பதால், 2023 ஆம் ஆண்டில் எழும் செலவினங்கள் நன்கு முன்னுரிமையளிக்கப்பட்டு ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்குள் நிர்வகிக்கப்படுதல் வேண்டும். முற்றிலும் இன்றியமையாத நோக்கத்திற்காக மேலதிக ஒதுக்கீட்டைக் கோரும் பட்சத்தில், அத்தகைய கோரிக்கைகள் எப்பொழுதும் பிரதான கணக்கீட்டு அலுவலரின் பரிந்துரையுடன் திறைசேரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

ஆயினும்கூட, மேலதிக ஒதுக்கீட்டிற்கான கோரிக்கைகள் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளின் முன்னுரையின் 3.1 பந்தியில் i முதல் xii வரை குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**07. பொது தொழில்முயற்சிகளின் ஒதுக்கீட்டுக் கோரிக்கை**

வரவு செலவுத் திட்டத்திலிருந்து வருடாந்தம் நிதியுதவி பெறாத வர்த்தக இயல்புடைய அரச நிறுவனங்கள், அவற்றின் செலவினங்களை ஈடுசெய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்பதுடன், வருமான பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு திறைசேரியிடமிருந்து மேலதிக ஒதுக்கீடுகளை கோரக்கூடாது.

**08. நி.பி. 66/69 கீழ் மாற்றல்களைக் கோரல்**

நிதி பிரமானம் 66 இன் கீழ் ஒதுக்கீடுகளை மாற்றுவதற்கான கோரிக்கைகள் 2023 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ முறைமை (ITMIS) மூலம் தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தின் தொடர்புடைய அலுவலர்களுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2023.12.31 ஆந் திகதிக்குப் பின்னர், நிதிப் பிரமானம் 69 இன் கீழ் ஒதுக்கீடுகளை மாற்றுவது ஏற்கனவே ஒதுக்கீடுகளை விட அதிகமாக செலுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் மாத்திரம் என்பதுடன், நிதிப் பிரமானம் 69 இல் குறிப்பிடப்பட்டவாறு, முன் அங்கீகாரத்தைப் பெறாததற்கு போதுமான காரணங்கள் வழங்கப்படாவிட்டால் அத்தகைய மாற்றல்கள் அங்கீகரிக்கப்படமாட்டாது என மேலும் வலியுறுத்தபபடுகிறது.

**09. முற்பணக் கணக்குகள் செயற்பாடு**

முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் பேணப்படுதல் வேண்டும் என்பதுடன் அதிகபட்ச செலவின வரையறையினை அதிகரிக்க அனுமதிக்கப்படமாட்டாது என்பதால், செலவினங்களை அவ்வப்போது மதிப்பாய்வு செய்து குறித்த வரையுறைக்குள் முகாமைசெய்தல் வேண்டும்.

**10. தெளிவுபடுத்துதல்**

இந்த சுற்றறிக்கை தொடர்பான ஏதேனும் தெளிவுபடுத்தல் தேவைப்படின், உங்களது அமைச்சு/திணைக்களம்/நிறுவனத்திற்குப் பொறுப்பான வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தின் தொடர்புடைய அலுவரைத் தொடர்பு கொள்ளவும்.

**ஒப்பம்/**
**கே.எம். மஹிந்த சிறிவர்தன**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள் :

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. செயலாளர், நிதி ஆணைக்குழு